# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය
## අති විශෙෂ
# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
## அதி விசேஷமானது

අංක 160/61 — 1975 අප්‍රේල් 22 වැනි අඟහරුවාදා — 1975.04.22

160/61 ம் இலக்கம்—1975 ம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 22 ந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

1975 இன் இல. 194/1

ச. அ. எண் : சீ. 333 (iii)/75

1972 ஆம் ஆண்டின் இலங்கை அரசியல் அமைப்பின் 101 ஆம் பிரிவின்படி, பாராளுமன்ற உறுப்பினராகிய திருவாளர் பேனட் சொய்ஸா அவர்களை, நிதி அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமாகிய கலாநிதி நாநயக்காரபத்திராகே மாட்டின் பேரேரா அவர்கள் தற்போதைய வெளிநாட்டுப் பயணத்திலிருந்து இலங்கை வந்தடையும்வரை, 1975 ஏப்பிரில் 19 ஆம் திகதியிலிருந்து நிதி அமைச்சராக பதிற் கடமையாற்ற சனாதிபதி அவர்கள் மகிழ்ச்சியுடன் நியமித்தமை இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அதி உத்தமனாரின் ஆணைப்படி,
டீ. எஸ். ஜே. டீ மெல்,
சனாதிபதியின் செயலாளருக்காக.

சனாதிபதியின் அலுவலகம்,
கொழும்பு, 1975 ஏப்பிரில் 21.

4–549

---

1975 இன். இல. 194/2

ச. அ. எண். : சீ. 335 (iii)/74

1972 ஆம் ஆண்டின் இலங்கை அரசியல் அமைப்பின் 103 (1) ஆம் பிரிவின்படி, திட்டமிடல் பொருளாதார அமைச்சின் மேலதிக செயலாளராகிய கலாநிதி எஸ். ஏ. மீகம, அவர்களை தமது கடமைகளுடன், 1975 ஏப்பிரில் 5 ஆம் திகதியிலிருந்து, திட்டமிடல் பொருளாதார அமைப்பின் செயலாளராகிய கலாநிதி எச். ஏ. த எஸ். குணசேகர, அவர்கள் இலங்கை வந்தடையும்வரை, திட்டமிடல் பொருளாதார அமைச்சின் செயலாளராக பதிற் கடமையாற்றும்படி சனாதிபதி அவர்கள் மகிழ்ச்சியுடன் நியமித்தமை இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அதி உத்தமனாரின் ஆணைப்படி,
எச். சீ. டி. விஜேசிங்க,
சனாதிபதியின் செயலாளர்.

சனாதிபதியின் அலுவலகம்,
கொழும்பு, 1975 ஏப்பிரில் 17.

4–548

---

1975 இன். இல. 194/3

ச. அ. எண். : சீ. 335 (iii)/74

1972 ஆம் ஆண்டின் இலங்கை அரசியல் அமைப்பின் 103 (1) ஆம் பிரிவின்படி, தொழில் ஆணையாளராகிய திருவாளர் டபிளியு. எல். பீ. த மெல், அவர்களை, தமது கடமைகளுடன் மறுகட்டளை பிறப்பிக்கும்வரை 1975 ஏப்பிரில் 16 ஆம் திகதியிலிருந்து தொழில் அமைச்சின் செயலாளராகிய திருவாளர் ஏ. ஈ. கொகளி மொரகொட, அவர்கள் ஓய்வுபெற முன்னிட்டு லீவு பெற்றுக்கொண்டமையால், தொழில் அமைச்சின் செயலாளராக கடமையாற்றும்படி சனாதிபதி அவர்கள் மகிழ்ச்சியுடன் நியமித்தமை இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அதி உத்தமனாரின் ஆணைப்படி,
எச். சீ. டி. விஜேசிங்க,
சனாதிபதியின் செயலாளர்.

சனாதிபதியின் அலுவலகம்,
கொழும்பு, 1975 ஏப்பிரில் 22.

4–574

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.